**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 39/2020 DW2**

28.10.2025 **பி.வா.சா.2 சுரேஷ் சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

1ம் பிரதிவாதி எனது தாய்மாமன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி காயமுற்ற போது நான் தான் அவரை மருத்துவமனை கொண்டு சென்று பணம் செலவு செய்து சிகிச்சை அளித்தேன் என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கான மருத்துவ செலவுகளை நானே எனது சொந்த செலவில் செய்தேன் என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி காயமுற்று இருந்த சமயத்தில் வாதியும் அவரது தாயாரும் தான் உடன் இருந்து கவனித்துக் கொண்டார் என்றும், அதற்கான ஆதாரங்கள் வாதியிடம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய முதன்மை சாட்சியம் பத்தி 5ல் 1ம் பிரதிவாதிக்கு நான் மருத்துவம் பார்த்து சவரட்டசணை செய்ததற்கும், 1ம் பிரதிவாதியின் வைத்திய செலவிற்கும், 1ம் பிரதிவாதிக்குண்டான /.05 செண்ட் நிலத்தை கடந்த 08.05.2019ம் தேதி 4ம் பிரதிவாதியான எனக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்று சொல்லியுள்ள வாசகம் சரிதான். நான் 1ம் பிரதிவாதிக்கு வைத்தியம் பார்த்ததாக சொல்லி அந்த செலவுத் தொகைக்காக சொத்தை எழுதி வாங்கிக் கொண்டேனா என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் மகளின் திருமண செலவிற்காகவும், 1ம் பிரதிவாதியின் மருத்துவ செலவிற்காகவும், தாயாரின் ஈமச்சடங்கிற்காகவும் சொத்தை விற்றதாக வாசகம் கண்டுள்ளதா என்றால் மருத்துவ செலவு மற்றும் தாயாரின் சவரட்சணை என்ற வாசகம் மட்டும் கண்டுள்ளது. வாதியின் தகப்பனாரான 1ம் பிரதிவாதி நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் மாதத்தில் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் 8ம் தேதிக்கு பிறகு தான் மருத்துவமனைக்கு என்னிடம் ரொக்கம் வாங்கிக் கொண்டு சென்றார். அதற்கு முன்பும் அவர் திருப்பூரில் வைத்தியம் பார்த்துள்ளார். 02.08.2018ந் தேதியில் இருந்தே 1ம் பிரதிவாதி சிகிச்சையில் இருந்து வந்தார் என்றால் திருப்பூரில் சிகிச்சையில் இருந்து இருக்கலாம் அது எனக்கு சரியாக தெரியவில்லை. பாண்டிச்சேரியில் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அவர் சிகிச்சையில் இருந்தார் என்றால் என்னிடம் பணம் வாங்கிக் கொண்டு தான் சென்றார் அதற்கு முன்பும் அவர் சிகிச்சையில் இருந்து இருக்கலாம் அது எனக்கு தெரியவில்லை. வழக்கு சொத்தை விற்பனை செய்து வந்த தொகையை 1ம் பிரதிவாதி மகளுக்காக வாதி பெயரில் திருவண்ணாமலை கூட்டுறவு வங்கியில் ரூ. 5

லட்சம், ரூ. 2 லட்சம் என நிரந்தர வைப்பீட்டில் வைப்பீடு செய்துள்ளார் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பணத்தை அவரது பெயரில் போட்டு அவரது மகளை நாமினியாக போட்டுள்ளார். மேற்படி நாமினியாக வாதியை 1ம் பிரதிவாதி நியமித்துள்ளது சம்மந்தமாக என்னுடைய பதிலுரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு நான் ரூ. 7 லட்சம் கொடுக்கவில்லை என்றும், அதனை அவர் டெப்பாசிட் செய்து அதில் அவர் மகளை நாமினியாக நியமிக்கவில்லை என்றால் சரியல்ல. நாமினியாக வாதியை நியமித்தது சம்மந்தமாக ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் என்னிடம் உள்ளது. 1ம் பிரதிவாதிக்கு முழுமையாக உரிமையில்லாத சொத்தை நான் அவரிடம் இருந்து மோசடியான முறையில் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரையப் பத்திரத்தில் உள்ள சொத்து வாதியின் பங்கை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. திருப்பூரில் 2, 3 இடங்களை 1ம் பிரதிவாதி வாங்கியுள்ளார், அதற்கான ஆவணத்தை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய பதிலுரையிலும், நிருபண வாக்குமூலத்திலும் திருப்பூரில் அவ்வாறு சொத்து வாங்கியது சம்மந்தமாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் அவ்வாறு திருப்பூரில் 1ம் பிரதிவாதி சொத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல. வாதி மேஜர் அடைந்து உரிய காலக்கெடுவிற்கும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளாதால் வழக்கு காலவரைசட்டத்தின் படி பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி வழக்குரையில் கேட்டுக்கொண்டபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. வாதிக்கு வழக்கு சொத்தில் உரிய பங்கு உள்ளது என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.